(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 25.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2009, செத்தெம்பர் 09, புதன்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0067 / '09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில் முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) தற்போதைய இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழேயே அரச ஒலிபரப்பு முகவர்களுக்கும், தனியார் கம்பனிகளுக்கும் தற்பொது ஒலிபரப்பிற்கான உரிமம் வழங்கப்படுகின்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும் தற்போதைய இலங்கைத் தொலைத்தொடர்பாடல் சட்டத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்படும் ஒரு நிறுவனம் என்பதையும், எனவே ஒலிபரப்பு உரிமங்களை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் பாபனச் சட்டத்தின் கீழ் வழங்குவது, ஏனைய உரிமைக்காரர்களுக்கும் விண்ணப்பதாரிகளுக்கும் தீமையேற்படுத்தும் என்பதையும், இது நீதியான வர்த்தகம், சம சந்தர்ப்பம் என்ற வகையில் கைச்சாத்தான உலக வர்த்தக நிறுவனம் மற்றும் ஏனைய சர்வதேச ஒப்பந்தங்களுடன் முரண்படுகின்றது என்பதையும் அவர் அறிவாரா என்பதை குறிப்பிடுவாரா?

(இ) தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமங்கள் வழங்கப்படும் தற்போதைய இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் சட்டத்தில் இவ்வேற்பாடுகளை சட்டவலுவற்ற தாக்குவதற்கும் தற்போதைய இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டத்திலோ அல்லது அதையொத்த ஒன்றிலோ இவ் ஏற்பாடுகளை மீள அறிமுகம் செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0087 / '09

2.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போதைய அரசின் பாதுகாப்பு அமைச்சரின் பதவிக்கால ஆரம்பம் முதல் இற்றை வரை பொலிஸ் கைதில் இருக்கும்போது மரணமடைந்துள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை யாது,

(ii) மேற்படி சந்தேகநபர்களின் பெயர்கள் யாவை,

(iii) ஒவ்வொரு சந்தேகநபரும் மரணமடைந்தது எவ்வாறு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0113 / '09

3.

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழ் வலய இலக்கம் 04 இன் கீழ் வருகின்ற காலி, அம்பாந்தோட்டை, கிளிநொச்சி மாவட்டங்களில் சமூக நலனோம்பல் கருத்திட்டங்களுக்காக 2006, 2007, 2008 மற்றும் 2009 ஆகிய ஆண்டுகளுக்காக தனித்தனியாக எவ்வளவு பணத்தொகை ஒதுக்கப்பட்டதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கருத்திட்டங்களின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருப்பின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி, வேலைகள் நிறைவுசெய்யப்பட்ட திகதி, மதிப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கருத்திட்டங்களின் கீழான நலன்பெறுநர் குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும் ,

(ii) 2009 ஆம் ஆண்டுக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் மதிப்பீட்டுத் தொகை தனித் தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0225 / '09

4.

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1986 -2000 ஆண்டு வரையிலான காலத்தில் நபர்கள் காணாமற்போதல் இடம்பெற்றுள்ளதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) மேற்படி கால கட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் காணாமற் போனவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும் ,

(ii) மேற்படி காணாமற்போதல்கள் சம்பந்தமாக தொடரப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும் ,

(iii) இதனோடு சம்பந்தப்பட்ட வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவரரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0441 / '09

5.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தளை மாவட்டத்தில் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட விசேட கருத்திட்டங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டங்கள் பிரதேச செயலகப் பிரிவுகள் ரீதியாக தனித்தனியாக யாவையென்பதையும் ,

(ii) அக் கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்,

(iii) அக் கருத்திட்டங்களின் வேலைகளை நிறைவு செய்வதற்கு உத்தேச மாயுள்ள திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0492 / '09

6.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களையும் புலம்பெயர்ந்தவர்களாக தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களையும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி சொத்துக்களில் முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுக்க எத்தனை தூதுக்குழுக்கள் இந்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப் பட்டனவென்பதையும்,

(ii) மேற்படி தூதுக்குழுக்களில் உள்ளடக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) மேற்படி தூதுக்குழுக்களில் அங்கம் வகித்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(iv) அவர்களது விமானச் செலவு, தங்குமிட வசதிகள் மற்றும் வேறு விடயங்கள் சார்பாக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் வேறு பிரச்சார நடவடிக்கைகளுக்காக உள்ளூர் மற்றும் வெளிநாடு என்ற வகையில் ஏற்பட்ட செலவினங்களின் அளவு யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன்?

0504 / '09

7.

கௌரவ சந்திம வீரக்கொடி,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட கல்விச் சேவையாளர் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தின் இறுதிப் பொதுக் கூட்டம் நடைபெற்ற திகதி யாதென்பதையும்,

(ii) மேற்படி பொதுக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட கல்விச் சேவையாளர் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான, விற்பதற்கு உத்தேசித்துள்ள காணியின் பெயர் யாதென்பதையும் ,

(iii) மேற்படி காணி அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவு யாதென்பதையும் ,

(iv) அக் காணியின் பரப்பளவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன் ?

0525 / '09

8.

கௌரவ வை. எம். நவரத்ன பண்டா,— சமூக அபிவிருத்தி, சமூக அநீதி ஒழிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005, 2006, 2007, 2008, 2009 ஆம் ஆண்டுகளுக்காக குறிப்பிட்ட அமைச்சுக்கு வரவு செலவுத்திட்டங்களின் மூலம் ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பதையும்,

(ii) அப்பணத்தொகை மூலதனச் செலவினம் மற்றும் மீண்டுவரும் செலவினம் என்ற வகையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறிய வருடங்களில் ஒதுக்கப்பட்ட பணத்தொகைக்கும், கிடைத்த பணத்தொகைக்கும் இடையே வேறுபாடு இருப்பின் அது எவ்வளவு என்பதையும்,

(ii) அவ்வாறு பணம் குறைந்திருப்பின் அதற்கான காரணம் என்ன என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சமூக அபிவிருத்தி சமூக அநீதி ஒழிப்பு அமைச்சின் கீழ் உள்ள பிரதான நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அவை வெவ்வேறாக எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0226 / '09

9.

கௌரவ பேமசிறி மானகே,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "புலர்ந்த இளமை" எனும் பெயரில் சுமார் 25,000 புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ள தென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) மேற்படி புத்தகத்தை அச்சிடுவதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும் ,

(ii) மேற்படி புத்தகங்கள் களஞ்சியத்துக்கு கிடைப்பதற்கு முன்னர் பணம் செலுத்தப்பட்டது எவ்வாறென்பதையும் ,

(iii) எத்தகைய தரப்பினர்களுக்கு மேற்படி புத்தகங்கள் விநியோகிக்கப் பட்டுள்ளன என்பதையும் ,

(iv) அதன் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0281 / '09

10.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) புகையிரத வீதிகளை புனரமைப்பதற்கான கருத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப் பட்ட அம்பேபுஸ்ஸ கல் உடைத்தல் கருத்திட்டத்தின் பொருட்டு கொள்வனவு செய்யப்பட்ட வெடிமருந்துகளின் ஒருபகுதி பயன்படுத்த முடியாமல் அழிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அழிக்கப்பட்டுள்ள வெடிமருந்துகளின் நிதி ரீதியிலான பெறுமதி மற்றும் இப்பொருட்கள் அழிக்கப்பட்ட திகதி என்பவை யாவை என்பதையும்,

(ii) இத்தகைய வெடிமருந்துகளை கொள்வனவு செய்வதற்கும், பின்னர் அவற்றைப் பயன்படுத்தாமல் அழிப்பதற்கும் காரணம் என்னவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0227 / '09

11.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008.12.31 ஆம் திகதியாகும் போது இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் காலி கடற்றொழில் துறைமுகத்திற்கு சொந்தமாக விருந்த பனிக்கட்டித் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென் பதையும்,

(ii) மேற்படி பனிக்கட்டித் தொழிற்சாலைகளை விற்பனை செய்வதற்கு அல்லது குத்தகைக்கு விடுவதற்கு பத்திரிகையில் விளம்பரமொன்று பிரசுரிக்கப் பட்டதாவென்பதையும்,

(iii) ஆமெனில், அது எப்போதென்பதையும்,

(iv) மேற்படி பனிக்கட்டித் தொழிற்சாலைகள் தற்போது விற்கப்பட்டுள்ளதா அல்லது குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) மேற்படி பனிக்கட்டித் தொழிற்சாலைகள் விற்கப்பட்டுள்ளதாயின் விற்கப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்,

(vi) இதை கொள்வனவு செய்தவர்களின் பெயர் மற்றும் முகவரி ஆகிய விபரங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு குத்தகை ஒப்பந்தங்களின் கீழ் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) இத்தகைய காணிகளில் எத்தனை நிரப்பு நிலையங்கள் உள்ளன என்பதையும்,

(iii) இவற்றில் ஐ.ஓ. சீ. கம்பனியின் கீழுள்ள நிரப்பு நிலையங்கள் உள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி குத்தகை ஒப்பந்தங்களின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டிருப்பதால் புகையிரத திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டியுள்ள நிலுவை குத்தகைத் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) இற்றைப்படுத்தப்படாத குத்தகை ஒப்பந்தங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன் ?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி. ப. 2.30 மணிக்கு 7 (5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

2.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1), — பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"அங்கவீனர்களுக்கான ஆலோசனை உதவிகளையும் வழங்குவதற்கான திதொரா தியேட்டர் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

3.

கௌரவ துலிப் விஜேசேக்கர,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ரோஹண திசாநாயக்க அமைப்பைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 105, நிகழ்ச்சித்திட்டம் 2 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் தொழாயிரம் மில்லியன் (ரூபா 900,000,000) ரூபாவிற்கும் மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு: 105 | — | தேசத்தைக் கட்டியெழுப்புதல், மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 02 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| கருத்திட்டம் : 01 | — | அமைச்சு தலைமை அலுவலகம் | |
| | | மீண்டுவருஞ் செலவுகள் | ரூ. 900,000,000 |
| | | | ரூ. 900,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, ஓகத்து மாதம் 18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 11 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 19,530,903,938.

*2.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*3.

பாராளுமன்ற தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*6.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*10.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*12.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*13.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*14.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*15.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*16.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*17.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

காடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*19.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச் )சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*20.

கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர் ,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 285, நிகழ்ச்சித்திட்டம் 1,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் அறுபத்து எட்டு கோடி ஐம்பத்து மூன்று இலட்சத்து தொன்னூற்று மூன்றாயிரத்து தொளாயிரத்து முப்பத்து எட்டு (ரூபா 68,53,93,938) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு: 285 | — | கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 01 | — | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | |
| கருத்திட்டம் : 01 | — | கமத்தொழில் அபிவிருத்தி | |
| | | மீண்டுவருஞ் செலவுகள் | ரூ. 68,53,93,938 |
| | | | ரூ. 68,53,93,938 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, ஓகத்து மாதம் 18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 10 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 18,845,510,000.

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதி களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப் பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத் தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*26.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*27.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

28.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

கிராஸ்ரூட்ஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

மஹிந்தானந்த அலுத்கமகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

33.

இலங்கை ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

34.

தாலியவக்க ஆனந்த விஹாரை கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

35.

கருணா சமாதி ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0410 / '09

1.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தின் வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிராம சேவையாளர் பதவிக்கான வெற்றிடங்களுக்காக அண்மையில் நடைபெற்ற கிராம சேவையாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டி பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) இப்பரீட்சையில் சித்தியெய்தியவர்களின் பெயர் மற்றும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்டவர்களில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(ii) இவர்கள் நேர்முகப்பரீட்சையின் போது பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iii) மேற்படி நேர்முகப் பரீட்சையில் நியமனம் பெற்றவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலும் இப்பிரிவில் கிராம சேவையாளர் பதவிக்கான வெற்றிடங்களில் எவ்வளவு எஞ்சியுள்ளதென்பதையும்,

(ii) இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0411 /'09

2.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தின் லக்கல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிராம சேவையாளர் பதவிக்கான வெற்றிடங்களுக்காக அண்மையில் நடைபெற்ற கிராம சேவையாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டி பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) இப்பரீட்சையில் சித்தியெய்தியவர்களின் பெயர் மற்றும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்டவர்களில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(ii) இவர்கள் நேர்முகப்பரீட்சையின் போது பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iii) மேற்படி நேர்முகப் பரீட்சையில் நியமனம் பெற்றவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலும் இப்பிரிவில் கிராம சேவையாளர் பதவிக்கான வெற்றிடங் களில் எவ்வளவு எஞ்சியுள்ளதென்பதையும்,

(ii) இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0412 / '09

3.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தின் தம்புல்ல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிராம சேவையாளர் பதவிக்கான வெற்றிடங்களுக்காக அண்மையில் நடைபெற்ற கிராம சேவையாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டி பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) இப்பரீட்சையில் சித்தியெய்தியவர்களின் பெயர் மற்றும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்டவர்களில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(ii) இவர்கள் நேர்முகப்பரீட்சையின் போது பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iii) மேற்படி நேர்முகப் பரீட்சையில் நியமனம் பெற்றவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலும் இப்பிரிவில் கிராம சேவையாளர் பதவிக்கான வெற்றிடங்களில் எவ்வளவு எஞ்சியுள்ளதென்பதையும்,

(ii) இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0413 / '09

4.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தின் நாஉல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிராம சேவையாளர் பதவிக்கான வெற்றிடங்களுக்காக அண்மையில் நடைபெற்ற கிராம சேவையாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டி பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) இப்பரீட்சையில் சித்தியெய்தியவர்களின் பெயர் மற்றும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்டவர்களில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(ii) இவர்கள் நேர்முகப்பரீட்சையின் போது பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iii) மேற்படி நேர்முகப் பரீட்சையில் நியமனம் பெற்றவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலும் இப்பிரிவில் கிராம சேவையாளர் பதவிக்கான வெற்றிடங்களில் எவ்வளவு எஞ்சியுள்ளதென்பதையும்,

(ii) இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0414 / '09

5.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தின் உகுவெல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிராம சேவையாளர் பதவிக்கான வெற்றிடங்களுக்காக அண்மையில் நடைபெற்ற கிராம சேவையாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டி பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) இப்பரீட்சையில் சித்தியெய்தியவர்களின் பெயர் மற்றும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்டவர்களில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(ii) இவர்கள் நேர்முகப்பரீட்சையின் போது பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iii) மேற்படி நேர்முகப் பரீட்சையில் நியமனம் பெற்றவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலும் இப்பிரிவில் கிராம சேவையாளர் பதவிக்கான வெற்றிடங்களில் எவ்வளவு எஞ்சியுள்ளதென்பதையும்,

(ii) இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0415 / '09

6.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தின் யட்டவத்த பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிராம சேவையாளர் பதவிக்கான வெற்றிடங்களுக்காக அண்மையில் நடைபெற்ற கிராம சேவையாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டி பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) இப்பரீட்சையில் சித்தியெய்தியவர்களின் பெயர் மற்றும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்டவர்களில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(ii) இவர்கள் நேர்முகப்பரீட்சையின் போது பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iii) மேற்படி நேர்முகப் பரீட்சையில் நியமனம் பெற்றவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலும் இப்பிரிவில் கிராம சேவையாளர் பதவிக்கான வெற்றிடங் களில் எவ்வளவு எஞ்சியுள்ளதென்பதையும்,

(ii) இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0416 / '09

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தின் அம்பங்கங்க கோறலே பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிராம சேவையாளர் பதவிக்கான வெற்றிடங்களுக்காக அண்மையில் நடைபெற்ற கிராம சேவையாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டி பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) இப்பரீட்சையில் சித்தியெய்தியவர்களின் பெயர் மற்றும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்டவர்களில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(ii) இவர்கள் நேர்முகப்பரீட்சையின் போது பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iii) மேற்படி நேர்முகப் பரீட்சையில் நியமனம் பெற்றவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலும் இப்பிரிவில் கிராம சேவையாளர் பதவிக்கான வெற்றிடங் களில் எவ்வளவு எஞ்சியுள்ளதென்பதையும்,

(ii) இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0417 /'09

8.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தின் கலேவெல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிராம சேவையாளர் பதவிக்கான வெற்றிடங்களுக்காக அண்மையில் நடைபெற்ற கிராம சேவையாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டி பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) இப்பரீட்சையில் சித்தியெய்தியவர்களின் பெயர் மற்றும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்டவர்களில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(ii) இவர்கள் நேர்முகப்பரீட்சையின் போது பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iii) மேற்படி நேர்முகப் பரீட்சையில் நியமனம் பெற்றவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலும் இப்பிரிவில் கிராம சேவையாளர் பதவிக்கான வெற்றிடங்களில் எவ்வளவு எஞ்சியுள்ளதென்பதையும்,

(ii) இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0418 / '09

9.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தின் மாத்தளை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிராம சேவையாளர் பதவிக்கான வெற்றிடங்களுக்காக அண்மையில் நடைபெற்ற கிராம சேவையாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டி பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) இப்பரீட்சையில் சித்தியெய்தியவர்களின் பெயர் மற்றும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்டவர்களில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்,

(ii) இவர்கள் நேர்முகப்பரீட்சையின் போது பெற்றுக்கொண்ட புள்ளிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்,

(iii) மேற்படி நேர்முகப் பரீட்சையில் நியமனம் பெற்றவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) மேலும் இப்பிரிவில் கிராம சேவையாளர் பதவிக்கான வெற்றிடங்களில் எவ்வளவு எஞ்சியுள்ளதென்பதையும்,

(ii) இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?